ஜூன் ....
.... 2019

விண்மீன் .காம்

# மூன்றாவது வார நடப்பு நிகழ்வுகள்

15 ஜூன் – 21 ஜூன்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நடப்பாண்டு Facebook Hall of Fameஇல் சேர்க்கப்பட்ட சோனல் சௌகைஜாம் (Zonel Sougaijam), எந்த இந்திய மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?



A) அருணாச்சலப்பிரதேசம்

B) மிசோரம்

C) நாகாலாந்து

D) மணிப்பூர் ☑

✓ ஒரு பயனரின் (User) தனியுரிமையை (Privacy) மீறும் வாட்ஸ்அப் பிழையைக் கண்டுபிடித்ததற்காக மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த கட்டடப் பொறியாளர் சோனல் சௌகைஜாம் (22), பேஸ்புக்கால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதற்காக பேஸ்புக் நிறுவனம் அவருக்கு $5000 அமெரிக்க டாலர்களை வழங்கியதுடன், வாட்ஸ்அப் பிழையைக் கண்டறிந்ததற்காக அவரை நடப்பாண்டு 'Facebook Hall of Fame'இலும் சேர்த்துள்ளது.

✓ வாட்ஸ்அப் மூலம் குரல் அழைப்பு மேற்கொள்ளும்போது, அழைப்பைப் பெறுபவரின் அனுமதி இல்லாமல் அழைப்பாளரை காணொளி அழைப்புக்கு மாற்ற அனுமதிக்கும் வழுவை (bug) சோனல் கண்டறிந்தார். இது அழைப்பைப் பெறுபவரின் தனியுரிமையை மீறுவதாகவும், அவர் என்ன செய்கிறார் என்பதை அவரது அனுமதியில்லாமலே பார்க்கவும் வழி வகுத்தது. இந்த ஆண்டுக்கான 'Facebook Hall of Fame'இல் இடம்பெற்றுள்ள 94 நபர்களின் பட்டியலில், சௌகைஜாமின் பெயர் தற்போது 16ஆவது இடத்தில் உள்ளது.

**2.** அண்மையில் காலமான இராஜநாத் சிங் 'சூர்யா', எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?



A) கவிதை

B) இதழியல் ☑

C) கலை

D) புகைப்படம்

✓ மூத்த பத்திரிகையாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான இராஜநாத் சிங் 'சூர்யா' (82), ஜூன்.13 அன்று, உத்தரப்பிரதேச மாநிலம், லக்னோவில் காலமானார். பல்வேறு செய்தித்தாள்களில் பணிபுரிந்துள்ள அவர், நன்கு அறியப்பட்ட கட்டுரையாளராகவும் இருந்துள்ளார்.

**3.** 2018ஆம் ஆண்டுக்கான 54ஆவது ஞானபீட விருது யாருக்கு வழங்கப்பட்டது?



A) அமிதவ் கோஷ் ☑

B) யு.ஆர்.அனந்தமூர்த்தி

C) கிருஷ்ணா சோப்தி

D) கிரிஷ் கர்நாட்

- ✓ அனைவரும் விரும்பி வாங்குகிற நூலின் ஆசிரியரும், இந்தியாவின் முன்னணி சமகால எழுத்தாளர்க -ளுள் ஒருவருமான அமிதவ் கோஷுக்கு, இலக்கியத்திற்கான அவரது சிறந்த பங்களிப்புக்காக 2018ஆம் ஆண்டுக்கான 54ஆவது ஞானபீட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ஜூன்.13 அன்று புது தில்லியில் நடந்த விருது வழங்கும் நிகழ்வில், மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி, அமிதவ் கோஷுக்கு ஞானபீட விருதினை வழங்கி கௌரவித்தார். ஆங்கில இலக்கியப் பணிக்காக ஞானபீட விருது பெறும் முதல் இந்திய எழுத்தாளர் கோஷ் ஆவார்.

- ✓ அமிதவ் கோஷின் படைப்புகள் பரந்த அளவிலான கருப்பொருள்களை சித்தரிக்கின்றன. The Circle of Reason (1986), The Shadow Lines (1988), The Calcutta Chromosome (1996), The Hungry Tide (2004), Sea of Poppies (2008), The Great Derangement: Climate Change and the Unthinkable (2016) முதலானவை அவரது புகழ்பெற்ற நூல்களுள் அடங்கும்.

- ✓ 1961இல் நிறுவப்பட்ட இஞ்ஞானபீட விருது, இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் எழுதும் இந்திய எழுத்தாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மேலும், காலஞ்சென்றவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுவதில்லை. இவ்விருது பெற்றவர்களுக்கு, ரூ.11 இலட்சம் ரொக்கப்பரிசும், பாராட்டுப்பத்திரமும், வெண்கலத்தாலான சரசுவதி தேவி சிலையும் வழங்கப்படுகிறது.

**4.** மெல்போர்னின் (IFFM – 2019) 10ஆவது இந்திய திரைப்பட விழாவில் முதன்மை விருந்தினராக பங்கேற்கவுள்ள இந்திய நடிகர் யார்?

A) நசுருதீன்ஷா

B) ஐஸ்வர்யா ராய் பச்சன்

C) இராணி முகர்ஜி

D) ஷாருக்கான் ☑



- ✓ வரும் ஆகஸ்ட் மாதம் 8 – 17 வரை நடைபெறவுள்ள மெல்போர்னின் (IFFM – 2019) 10ஆவது இந்திய திரைப்பட விழாவில், ஹிந்தி நடிகர் ஷாருக்கான் முதன்மை விருந்தினராக பங்கேற்கவுள்ளளார். ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இந்த விழாவில், முன்னணி திரைப்பிரபலங்களுள் ஒருவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று இவ்விழாவிற்கு தலைமைதாங்குவார்.

- ✓ அச்சமயம், விழாவின் ஒருபகுதியாக, இந்தியர்கள் மற்றும் பல்வேறு பிரமுகர்கள் முன்னிலையில் சிறப்பு விருந்தினர் இந்திய தேசியக் கொடியை ஏற்றுவார். IFFM என்பது விக்டோரிய அரசாங்கத்தின் முன்னெடுப்பாகும். இது இந்தியத் திரைப்படத் தொழிற்துறைக்கும், விக்டோரிய அரசுக்கும் இடையே உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5.** வயதான பெற்றோரைக் கைவிட்டுவிடுவோருக்கு சிறைத்தண்டனை விதிக்கும் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநில அமைச்சரவை எது?

**A)** மத்தியப்பிரதேசம்

**B)** பீகார் ☑

**C)** உத்தரப்பிரதேசம்

**D)** இராஜஸ்தான்



- ✓ பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் தலைமையிலான அமைச்சரவை, வயதான பெற்றோரைக் கைவிட்டுவிடும் மகன் / மகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கும் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தச் சட்டத்தின்கீழ், தங்கள் மகன்கள் அல்லது மகள்கள் வயதான காலத்தில் தங்களை சரியாக பார்த்துகொள்வதில்லை எனப் பெற்றோர் புகாரளித்தால், அவர்கள் பிள்ளைகள் மீது பிணையில் வெளிவர இயலாத சட்டப்பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவுசெய்யப்படும்.

**6.** பின்வரும் எந்த நகரத்தின் IFC – IORஇல், கடல்வழித் தகவல் பகிர்வு பயிலரங்கை இந்திய கடற் படை நடத்தியுள்ளது?

**A)** கொல்கத்தா

**B)** புனே

**C)** குருகிராம் ☑

**D)** கொச்சின்

- ✓ இந்திய கடற்படையும், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின் தகவல் இணைவு மையமும் இணைந்து கடல்வழித் தகவல் பகிர்வு குறித்த பயிலரங்கம் ஒன்றை ஜூன்.12 அன்று குருகிராமில் நடத்தின. இந்த 2 நாள் பயிலரங்கில், 29 நாடுகளைச் சேர்ந்த 41 பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்தப்பயிலரங்கில், இந்திய பெருங்கடல் பிராந்திய தகவல் இணைவு மையத்தின் நோக்கங்கள் பற்றியும், இதன் தகவல் பரிமாற்ற செயல்பாடுகள் குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

- ✓ பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு கடல்வழித் தீவிரவாதம், கடற்கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், ஆபத்தின்போது உதவுதல், பேரிடர் நிவாரணம் அளித்தல் போன்ற சவால்களை எதிர்கொள்வது குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

**7.** UNICEFஇன் டேனி கே மனிதாபிமான விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ள இந்தியர் யார்?



A) நரேந்திர மோடி

B) பிரியங்கா சோப்ரா ☑

C) மேதா பட்கர்

D) சண்டி பிரசாத் பட்

- ✓ UNICEF அமைப்பின் குழந்தைகள் உரிமைக்கான நல்லெண்ணத் தூதராக இருந்து வரும் இந்திய நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு, வரும் டிச.3 அன்று நியூயார்க்கில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில், டேனி கே மனிதாபிமான விருது (Danny Kaye Humanitarian Award) வழங்கப்படவுள்ளது. சமுதாயம் சார்ந்த பங்களிப்பாளராகவும், குழந்தைகளின் கல்விக்காக குரல் கொடுப்பவராகவும் பிரியங்கா அறியப்படுகிறார்.

- ✓ ஐக்கிய நாடுகளின் சர்வதேச “Girl Up” பரப்புரையின் ஒருபகுதியாக இருந்துவரும் இவர், இந்தியாவில் பெண் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விழிப்புணர்வு பெற, இந்தியாவில் உள்ள பல அரசு சாரா நிறுவனங்களுடனும் தொடர்பில் உள்ளார். சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் கல்வி மற்றும் பெண்ணுரிமைகள் குறிப்பாக பாலின சமத்துவம் மற்றும் பெண்ணியம் போன்ற பல்வேறு விஷயங்களுக்கு அவர் குரல் கொடுத்து வருகிறார். UNICEFஇன் முதல் நல்லெண்ண தூதராக இருந்த நடிகர் – கொடையாளி டேனி கேயின் பெயரால், இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

**8.** நடப்பாண்டு சர்வதேச வெளிறல் நோய் விழிப்புணர்வு தினத்துக்கான கருப்பொருள் என்ன?

A) Shining our light to the world

B) Still Standing Strong ☑

C) Advancing with renewed hope

D) Celebrate diversity; promote inclusion; protect our rights

- ✓ உலகெங்கும் வெளிறல் நோயுடன் வாழும் மனிதர்களின் மனித உரிமைகளை கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.13 அன்று சர்வதேச வெளிறல் நோய் விழிப்புணர்வு தினம் (International Albinism Awareness Day) அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், “Still Standing Strong” என்பதாகும்.

- ✓ அல்பினிசம் என்பது தோல், முடி & கண்களில் நிறமி முழுமையாகவோ / பகுதியாகவோ இல்லாததால் மனிதர்களில் காணப்படும் ஒரு பிறவி நோயாகும். இது ஒளி அச்சம் (Photophobia), விழி நடுக்கம் (Nystagmus), மங்கு பார்வை (Amblyopia) போன்ற பார்வைக்குறை தன்மைகளுடன் தொடர்புடையது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சமூக களங்கம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை

அணுகுவதில் தடைகள் மற்றும் சமூக மற்றும் அரசியல் தளங்களில் புறக்கணிப்பு ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர்.

**9.** ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்கள் குழு கூட்டம், பின்வரும் எந்த நகரத்தில் தொடங்கியுள்ளது?

A) ஜாகர்த்தா

B) பிஷ்கெக் ☑

C) கோலாலம்பூர்

D) நைப்பியிதோ

✓ ஜூன்.13 அன்று, கிர்கிஸ்தானின் தலைநகரமான பிஷ்கெக்கில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) தலைவர்கள் குழு கூட்டம் தொடங்கியது. பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் முதல் பல – தரப்பு உச்சிமாநாடாகும் இது. SCO உறுப்பினராக இந்தியா ஆன பிறகு நடைபெறும் இரண்டாவது தலைவர்கள் குழு கூட்டமாகவும் இது உள்ளது. எட்டு உறுப்பு நாடுகளின் அதிபர்கள் மற்றும் பிரதமர்கள் இப்பல – தரப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பார்கள். இதில் 4 நாடுகளின் தலைவர்கள் பார்வையாளர்களாக கலந்துகொள்வார்கள்.

✓ இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கும் தலைவர்கள், தங்களின் கலந்துரையாடல்களின்போது சர்வதேச பாதுகாப்பு சூழ்நிலை, பல – தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு, மக்கள் – மக்கள் பரிமாற்றம் மற்றும் சர்வதேச மற்றும் பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகளில் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. SCO என்பது சீனாவை தலைமையாகக் கொண்ட எட்டு உறுப்புநாடுகளின் பொருளாதார & பாதுகாப்புக் கூட்டணியாகும். தலைவர்கள் குழு என்பது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சபட்ச முடிவெடுக்கும் அமைப்பாகும்.

**10.** இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO), தனக்கென சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்க, எந்த ஆண்டை இலக்காக நிர்ணயித்துள்ளது?

A) 2030 ☑

B) 2060

C) 2070

D) 2050

2030

✓ ஜூன்.13 அன்று இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் Dr. K சிவன், 2030ஆம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி ஆய்வு மையம் தனக்கென சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்கும் என அறிவித்தார். இது விண்ணுக்கு அதிகமான விண்வெளி வீரர்களை அனுப்ப ISROவுக்கு உதவும். விண்வெளி நிலையம் என்பது வாழத்தகுந்த செயற்கைக்கோள் போன்றது. இது, நீண்டகாலத்திற்கு விண்ணிலிருந்து ஆய்வுசெய்ய குழு உறுப்பினர்களுக்கு உதவும் திறன்கொண்டது.

- இத்திட்டம், ககன்யான் திட்டத்தின் நீட்சியாகும். 2022ஆம் ஆண்டளவில் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்குப் பிறகு, விண்வெளி நிலையம் அமைப்பதற்கான முன்மொழிவு, மத்திய அரசிடம் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பப்படும். இந்தத் திட்டம் 5 முதல் 7 ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு எதுவும் வெளியிடப்படவில்லை.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் கவிஞர் சபரிநாதனுக்கு சாகித்ய அகாதமியின் நடப்பாண்டுக்கான ‘யுவ புரஸ்கார்’ விருது வழங்கப்பட்டுள்ளது. ‘வால்’ என்ற அவரது கவிதைத் தொகுப்புக்காக எழுத்தாளர் சபரிநாதனுக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல குழந்தைகள் இலக்கியத் துறைக்கு அளித்த பங்களிப்பிற்காக, எழுத்தாளர் தேவி நாச்சியப்பனுக்கு ‘பால சாகித்ய புரஸ்கார்’ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மறைந்த ‘குழந்தைக் கவிஞர்’ அழ. வள்ளியப்பாவின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.
- நீலகிரி மாவட்ட ஆட்சியர் இன்னசன்ட் திவ்யா, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வீரராகவராவ், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்துாரி ஆகியோருக்கு முதலமைச்சர் பழனிசாமி பசுமை விருதுகளை ஜூன்.13 அன்று வழங்கினார். நெகிழிக்கழிவுகளை சிறப்பாக கையாளுதல் உள்ளிட்ட பசுமை நடவடிக்கைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நடப்பாண்டில் வரும் உலக குருதிக்கொடை தினத்துக்கான முழக்கவரி (Slogan) என்ன?




**A)** Share Life, Give Blood

**B)** Safe Blood for All (அனைவருக்கும் பாதுகாப்பான குருதி) ☑

**C)** Blood Connects us All

**D)** Every Blood Donor is a Hero

✓ பாதுகாப்பான குருதி & குருதித் தயாரிப்புகளின் தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், குருதிக்கொடையாளிகளுக்கு நன்றி தெரிவிப்பதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.14 அன்று உலக குருதிக்கொடை தினம் (World Blood Donor Day) கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ "Blood Donation and Universal Access to Safe Blood Transfusion" என்பது நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். இது, பன்னாட்டளவில் சுகாதாரக் காப்பீட்டை அடைவதற்கான ஓர் அங்கமாக உள்ளது. "Safe Blood for All" என்ற முழக்கவரியும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கருப் பொருள், உலகெங்கும் அதிகமான மக்களை குருதிக்கொடையாளிகளாக உருவாக்கவும், தொடர்ந்து குருதிக்கொடை கொடுக்கவும் ஊக்குவிக்கிறது.

**2.** கட்டட வரைவுப்படங்களுக்கு ஒப்புதல் அளிக்க, ஆன்லைன் வசதியை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?



**A)** கர்நாடகா ☑

**B)** ஆந்திரப்பிரதேசம்

**C)** ஒடிசா

**D)** சத்தீஸ்கர்

✓ கர்நாடக முதலமைச்சர் H.D குமாரசாமி, அண்மையில் 118 வலைத்தளங்களைத் தொடங்கிவைத்தார். அவற்றின் மூலம், கட்டட வரைவுப் படங்களுக்கான ஒப்புதல்கள், நில பயன்பாட்டு மாற்றம் மற்றும் பிற தொடர்புடைய அனுமதிகளை பொதுமக்கள் ஆன்லைன் மூலம் பெற முடியும். இதன்மூலம், இடைத் தரகர்கள் மற்றும் தாமதங்களை மக்கள் முற்றாகத் தவிர்க்க இயலும்.

✓ இது, அதிக வெளிப்படைத்தன்மையின் மூலம் ஊழலை முடிவுக்குக்கொண்டுவரும். மேலும், மக்களின் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். இவ்வலைத்தளங்கள் & மென்பொருள்கள் 14 துறைகளை ஒருங்கிணைத்துள்ளன. விண்ணப்பங்களின் நிலை குறித்த தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவல் மூலம் பகிரப்படும்.

**3.** அண்மையில் காலமான பழவிள இரமேசன், எந்த மாநிலத்தின் புகழ்பெற்ற கவிஞராவார்?

A) கேரளா ☑

B) கர்நாடகா

C) தெலுங்கானா

D) ஒடிசா



✓ புகழ்பெற்ற பாடலாசிரியரும், கவியுமான பழவிள இரமேசன் (83), ஜூன்.13 அன்று கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் காலமானார். நடப்பாண்டின் கேரள சாகித்திய அகாதமி விருதினை பெற்றுள்ள இவர், கேரள மொழி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். 'மழயுடே ஜலகம்', 'ஞான் என்டே கடுகலேலிக்கு' மற்றும் 'பழவிள இரமேசன்டே கவிதகள்' முதலானவை இவரது கவிதைத் தொகுப்புகளாகும்.

**4.** தொழிலாளர் அரசு காப்பீட்டு (ESI) சட்டத்தின்கீழ், பங்களிப்பு விகிதத்தை இந்திய அரசு 6.5 சதவீதத்திலிருந்து எத்தனையாக குறைத்துள்ளது?

A) 6.0%

B) 5.5%

C) 4.0% ☑

D) 4.5%

✓ தொழிலாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின்கீழ் (Employees' State Insurance Act), சுகாதாரப் பயன்களுக்கு தகுதியுடைய தொழிற்துறை தொழிலாளர்களின் சம்பளப் பங்களிப்பை 6.5 சதவீதத்திலிருந்து 4.0 சதவீதமாகக் குறைத்து மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை, இந்தியாவின் முறைசாரா தொழிலாளர் படையை ஒழுங்குபடுத்துவதையும், சமூகக் காப்பீடுகளை விரிவுபடுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

✓ குறைக்கப்பட்ட இந்த வீதங்கள் வரும் ஜூலை.1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும். இதனால் 3.6 கோடி தொழிலாளர்களும், 12.85 இலட்சம் பணியமர்த்துநர்களும் பயனடைவார்கள். குறைக்கப்பட்ட இந்தப் பங்களிப்பு வீதமானது, ESI திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு கணிசமான நிவாரணத்தை அளிப்பதோடு இனிவரும் காலங்களில் ESIஇல் சிறு நிறுவனங்களும் தாமாகவே முன்வந்து சந்தாதாரர் -களாக இணையும் வாய்ப்பையும் அதிகரிக்கும்.

✓ 1948ஆம் ஆண்டின் ESI சட்டத்தின்கீழ், காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மருத்துவ, பண, மகப்பேறு, இயலாமை & சார்பு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ESI சட்டம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தால் (ESIC) நிர்வகிக்கப்படுகிறது. ESI சட்டத்தின்கீழ், அளிக்கப்படும் பயன்கள் பணியமர்த்துநர்கள் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்புகளால் நிதியளிக்கப்படுகின்றன.

- ✓ மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மூலம் இந்திய அரசு, ESI சட்டத்தின்கீழ், பங்களிப்பு வீதத்தை தீர்மானிக்கிறது.

**5.** எந்தெந்த மத்திய அமைச்சர்களுக்கு, முன்னாள் மாணவர் விருதை வழங்க ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் முடிவுசெய்துள்ளது?

**A)** இரவிசங்கர் பிரசாத் & தர்மேந்திர பிரதான்

**B)** நிதின் கட்கரி & பியுஷ் கோயல்

**C)** நிர்மலா சீதாராமன் & S ஜெய்சங்கர் ☑

**D)** இரமேஷ் போக்ரியால் & பிரகாஷ் ஜவடேகர்

- ✓ ஜவகர்லால் நேரு பல்கலை தனது புகழ்பெற்ற முன்னாள் மாணவர் விருதை மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமனுக்கும், S ஜெய்சங்கருக்கும் வழங்க முடிவுசெய்துள்ளது. வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜவகர்லால் நேரு பல்கலையின் 3ஆவது பட்டமளிப்பு விழாவின்போது அவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும். சீதாராமன் தனது MA மற்றும் M.Phil பட்டத்தையும், ஜெய்சங்கர் தனது M.Phil மற்றும் முனைவர் ஆராய்ச்சி பட்டத்தையும் ஜவகர்லால் நேரு பல்கலையில் பெற்றுள்ளனர்.

**6.** இந்தியாவில் LPG சந்தைப்படுத்தலில் தற்போதுள்ள சந்தைப்படுத்தல் கட்டமைப்பை ஆய்வு செய்யவுள்ள குழுவின் தலைவர் யார்?



**A)** எர்ரோல் டி’சோசா

**B)** MA பதான்

**C)** GC சதுர்வேதி


**D)** கிரீத் பாரிக் (Kirit Parikh) ☑

- ✓ இந்தியாவில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வளி (Liquefied Petroleum Gas – LPG) சந்தைப்படுத்தலில் தற்போதுள்ள சந்தைப்படுத்தல் கட்டமைப்பை ஆய்வு செய்வதற்காக 5 பேர் கொண்ட குழுவொன்றை இந்திய அரசு கட்டமைத்துள்ளது. பொருளாதார வல்லுநர் கிரீத் பாரிக் தலைமையிலான இந்தக் குழு, LPG சந்தைப்படுத்தலின் வரையறை அல்லது தரச்செந்தரத்துடன் (Quality Standard) தொடர்புடைய சிக்கல்களை ஆராயும்.

- ✓ தனியார்துறை பங்கேற்பை ஈர்பதற்காக அரசாங்கக் கொள்கைகளை தாராளமயப்படுத்துவதற்கான நோக்கமும் இதில் அடங்கும். இக்குழு தனது அறிக்கையை ஜூலை இறுதிக்குள் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. LPG கட்டுப்பாட்டு ஆணையின் அடிப்படையில், வீட்டு உபயோக LPGகள் எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் மட்டுமே வழங்கப்பட வேண்டும். ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் போன்ற தனியார் நிறுவனங்கள், மானிய விலையில் சமையல் எரிவாயுவை விற்க அனுமதிக்கும் இடைநிலைப் பகுதிகளையும் (Grey Areas) இந்தக் குழு அடையாளங்காணும்.

**7.** OBC உட் – பிரிவுகளுக்கான குழுவிற்கு இரண்டு மாதங்கள் நீட்டிப்பிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் குழுவின் தலைவர் யார்?

A) S K கங்வார்



B) பிரகலாத் சிங் படேல்

C) G ரோகினி ☑


D) R L கட்டாரியா

✓ இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களில் (Other Backward Classes) உட்பிரிவு செய்ய வேண்டும் என்ற சிக்கலை ஆராய்ந்திடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் காலத்தை மேலும் 2 மாதங்களுக்கு, அதாவது, 31 ஜுலை 2019 வரை, நீட்டிப்பு செய்வதற்கான தனது பின்னேற்பு ஒப்புதலை (ex – post facto approval) மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது.

✓ இந்திய குடியரசுத்தலைவரின் ஒப்புதலுடன், 2017 அக்டோபர் 2 அன்று, அரசியலமைப்பு சட்டப்பிரிவு 340இன்கீழ் அமைக்கப்பட்ட இந்த ஆணையத்தின் காலம், 6ஆவது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பங்கேற்பாளர்களுடன் நடத்திய விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில், மத்திய பட்டியலில் இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களுக்குள்ளாக உட்பிரிவு செய்ய வேண்டும் என்ற சிக்கலை மதிப்பீடு செய்திட இந்தக் கால அவகாசம் உதவும். இது, இந்தச் சிக்கல் குறித்த விரிவான அறிக்கையை ஆணையம் தாக்கல் செய்திட உதவும். ஓய்வுபெற்ற நீதிபதி G ரோகினி தலைமையில் இந்தக் குழு செயல்பட்டு வருகிறது.

**8.** கிர்கிஸ்தானின் மிகவுயர்ந்த தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள SCO உறுப்பினர் யார்?

A) எமோமாலி ரஹ்மோன்



B) விளாடிமிர் புதின்

C) நரேந்திர மோடி


D) சி சின்பிங் (Xi Jinping) ☑

✓ சீன அதிபர் சி சின்பிங்கிற்கு கிர்கிஸ்தானின் "Manas Order of the First Degree" எனப் பெயரிடப்பட்ட மிகவுயர்ந்த தேசிய விருது, பிஷ்கெக்கில் உள்ள ஆலா அர்ச்சா மாநில இல்லத்தில் வழங்கப்பட்டது. சி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட குழுவின் தலைவர்களுடன், ஜூன் 14 – 15 அன்று நடந்த 19ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிஷ்கெக்குக்கு (கிர்கிஸ்தானின் தலைநகரம்) சென்றிருந்தார்.

✓ SCO என்பது சீனாவை தலைமையாகக் கொண்ட 8 உறுப்புநாடுகளின் பொருளாதார & பாதுகாப்புக் கூட்டணியாகும். சீனா, இரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான்

முதலிய நாடுகள் SCOஇன் நிறுவன உறுப்பு நாடுகளாகும். இந்தியாவும், பாகிஸ்தானும் பெய்ஜிங்கைச் சேர்ந்த இந்தப்பிராந்தியப் பாதுகாப்புக்குழுவில் 2017ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டன.

**9.** கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் தற்போதைய தலைவராக உள்ள நாடு எது?




**A)** தென்னாப்பிரிக்கா

**B)** இரஷ்யா

**C)** இந்தியா ☑

**D)** சீனா

✓ கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் (Kimberley Process Certification Scheme – KPCS) நிறுவன உறுப்பினர்களுள் ஒன்றான இந்தியா, கிம்பர்லி செயல்முறையின் 2019ஆம் ஆண்டுக்கான தலைவராக உள்ளது. இரஷ்ய கூட்டமைப்பு, அதன் துணைத்தலைவராக உள்ளது. ஜூன் 17 – 21 வரை கிம்பர்லி செயல்முறையின் கூட்டத்தொடர் சந்திப்பை இந்தியா, மும்பையில் நடத்தி வருகிறது.

✓ கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் வெவ்வேறு செயற்குழுக்கள் மற்றும் குழுக்களின் அமர்வுகளைத் தவிர, சுரங்கத் தொகுதி மற்றும் சுரங்கக் கைவினைஞர்கள் தொடர்புடைய இரண்டு சிறப்பு அமர்வுகளும் இதன்சமயம் நடைபெறும். 5 நாள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், இந்திய அரசு மற்றும் பிற பங்கேற்கும் நாடுகள், தொழிற்துறை மற்றும் உள்நாட்டு சமூகங்களைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். தற்போது, 28 உறுப்பினர்களையுடைய ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 82 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 55 உறுப்பினர்களை KPCS கொண்டுள்ளது.

**10.** கார்கில் போரில் வெற்றிபெற்ற 20ஆவது ஆண்டு நிறைவின் கருப்பொருள் என்ன?



**A)** Remember, Rejoice and Renew ☑

**B)** Pride, Honour and Inspire

**C)** Salute valour of the armed forces

**D)** Peace & Humanity

✓ பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வலிமையான வெற்றியை நினைவுகூரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.26 அன்று, கார்கில் வெற்றி நாள் கொண்டாடப்படுகிறது. 'ஆபரேஷன் விஜய்'யின் வெற்றியைத் தொடர்ந்து இந்த நாள் உருவாக்கப்பட்டது.

✓ நடப்பாண்டில், கார்கில் போர் வெற்றியின் இருபதாவது ஆண்டு நிறைவை, ஜூலை 25 – 27 வரை திராஸ் மற்றும் புது தில்லியில் பெருமையுடனும், மரியாதையுடனும் உத்வேகத்துடனும் இந்தியா கொண்டாடவுள்ளது. நடப்பாண்டில், "Remember, Rejoice and Renew – நினைவுகூர், மகிழ் மற்றும் புதுப்பி" என்னும் கருப் பொருளுடன் இந்த நாள் கொண்டாடப்படவுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** 2020 கோப்பா அமெரிக்காவில் விருந்தினராக பங்கேற்கவுள்ள ஆசிய நாடு எது?

A) சவுதி அரேபியா

B) சீனா

C) இந்தியா

D) கத்தார் ☑

✓ தென்னமெரிக்க கால்பந்து கூட்டமைப்பானது (SAFC) 2020ஆம் ஆண்டின் கோப்பா அமெரிக்காவில் விருந்தினர்களாக பங்கேற்க ஆஸ்திரேலியாவுக்கும், கத்தாருக்கும் அழைப்பு விடுத்துள்ளது. கொலம்பியா மற்றும் அர்ஜென்டினா முதலான நாடுகளில் முதன்முறையாக நடக்கும் 2020ஆம் ஆண்டு போட்டிகளில், இவ்விரு நாடுகளும், 10 தென்னமெரிக்க நாடுகளுடன் பங்கேற்கும். 2019 AFC ஆசியக் கோப்பையின் நடப்பு சாம்பியனும், 2022 FIFA உலகக்கோப்பையின் வழங்குநருமாக (host) உள்ள கத்தார், 2019 கோப்பா அமெரிக்காவில் இம்முறை முதன்முறையாக அறிமுகமாகிறது.

**2.** பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனத்தின் நடப்பாண்டுக்கான சர்வதேச அமைதி அட்டவணையில் (Global Peace Index) இந்தியாவின் தரநிலை என்ன?

A) 152ஆவது

B) 141ஆவது ☑

C) 136ஆவது

D) 155ஆவது




✓ ஆஸ்திரேலிய மதியுரையகமான பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நடப்பாண்டு சர்வதேச அமைதி அட்டவணையில், 163 நாடுகளுள் ஐந்து இடங்கள் பின்தங்கி 141ஆவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. கடந்த 2018இல், 163 நாடுகளுள் இந்தியா 136ஆவது இடத்தில் இருந்தது. சமூகப்பாதுகாப்பு, உள்நாட்டு & சர்வதேசச் சிக்கல்கள், நாட்டில் இராணுவத்தின் செயல்பாடு முதலான அளவீடுகளின் அடிப்படையில், நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

✓ இந்த அறிக்கை உலக மக்கள்தொகையில் 99.7 சதவீதத்தை உள்ளடக்கியுள்ளது. மேலும், இதனைத் தொகுப்பதற்கு மிகவும் மதிக்கத்தக்க மூலாதாரங்களிலிருந்து 23 பண்பறி (qualitative) மற்றும் அளவறி (quantitative) சுட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த அட்டவணையின்படி, ஐஸ்லாந்து, பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தான் கடைசி இடம் பெற்றுள்ளது.

✓ பூடான், பட்டியலில் 15ஆவது இடத்தைப் பிடித்து, தெற்காசிய நாடுகளில் அமைதி மிகுந்த நாடாக உள்ளது. அதையடுத்து 72ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. நேபாளம், 76ஆவது இடத்தையும், வங்க தேசம், 101ஆவது இடத்தையும், பாகிஸ்தான் 153ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. இந்த அட்டவணையை

ஆஸ்திரேலிய தொழினுட்ப தொழில்முனைவோரும், கொடையாளியுமான ஸ்டீவ் கில்லேலியா (Steve Killelea) நிறுவினார்.

**3.** இந்தியாவின் எந்த அரசு சாரா அமைப்புக்கு (NGO), நடப்பாண்டின் BBC உலக சேவைக்கான சர்வதேசச் சாம்பியன் விருது வழங்கப்பட்டுள்ளது?

A) அர்த் இந்தியா

B) சேத்னா

C) சேவ் லைப் பவுண்டேஷன்

D) அக்ஷய பாத்திரம் (Akshaya Patra) ☑

✓ ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரிஸ்டல் நகரத்தில் நடந்த BBC உணவு & பண்ணை தொழிலுக்கான விருது வழங்கும் விழாவில், பெங்களூரைச்சேர்ந்த 'அக்ஷய பாத்திரம்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் தனது பள்ளி மதிய உணவு திட்டத்திற்காக 2019 BBC உலக சேவைக்கான சர்வதேசச் சாம்பியன் (BBC World Service Global Champion) விருதைப் பெற்றது.

✓ பல்வேறு மக்களின் பசியைப் போக்கும் தனி நபரையோ அல்லது அமைப்பையோ இந்த விருது அங்கீகரிக்கிறது. 'அக்ஷய பாத்திரம்' என்பது இந்தியாவில், உலகின் மிகப்பெரிய பள்ளி மதிய உணவு திட்டங்களில் ஒன்றை செயல்படுத்திவரும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

**4.** எந்தத் தேதியில், உலக மூத்தோர் இழித்தல் விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்படுகிறது?

A) ஜூன் 15 ☑

B) ஜூன் 14

C) ஜூன் 16

D) ஜூன் 13

✓ மூத்தோர் மீதான வன்கொடுமைத் தாக்குதல் மற்றும் இழித்தலுக்கு எதிராக குரலை உயர்த்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.15 அன்று உலக மூத்தோர் இழித்தல் விழிப்புணர்வு தினம் (World Elder Abuse Awareness Day) கடைப்பிடிக்கப்படுகிறது. ஐ.நா அவையின் கருத்துப்படி, மூத்தோரில் அறுவருள் ஒருவர், ஏதேனும் ஓர் இழித்தலுக்கு ஆளாகிறார்கள். மூத்தோர் மீதான கொடுமை என்பது கடுமையான உடற்காயங்களுக்கும், நீண்டகால உளவியல் விளைவுகளுக்கும் காரணமாக அமைகின்றது.

✓ உலகெங்கிலும் உள்ள இலட்சக்கணக்கான மூத்தோர்களின் உடல்நலம் மற்றும் மனித உரிமைகளை பாதிக்கும் ஓர் சமூகப் பிரச்சனையாக இது உள்ளது. பல நாடுகளில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இக்கொடுமை அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் 900 மில்லியனாக இருந்த 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் உலகளாவிய மக்கள்தொகை, 2050ஆம் ஆண்டில் சுமார் 2 பில்லியனாக அதாவது இரண்டு மடங்குக்கும் அதிகமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

5. கார்மைக்கேல் நிலக்கரிச் சுரங்கத்திட்டம், பின்வரும் எந்த நாட்டுடன் தொடர்புடையது?



A) இந்தோனேசியா

B) நியூசிலாந்து

C) ஆஸ்திரேலியா ☑

D) மலேசியா

✓ குயின்ஸ்லாந்து மாகாண அதிகாரிகள், அதானி குழுமத்தின் நிலத்தடி நீர் மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததை அடுத்து, அகமதாபாத்தைச் சேர்ந்த அக்குழுமம், சமீபத்தில் ஆஸ்திரேலியாவில், சர்ச்சைக்குள்ளான கார்மைக்கேல் நிலக்கரிச் சுரங்கத்திட்டத்திற்கு இறுதி ஒப்புதலைப் பெற்றுள்ளது. அதானி குழுமத்தின் இந்தப் பில்லியன் டாலர் பிரம்மாண்ட நிலக்கரிச் சுரங்கத்திட்டத்துக்கான இறுதி ஒப்புதல், பிரதமர் ஸ்காட் மோரிசன் தலைமையிலான ஆஸ்திரேலியாவின் நிலக்கரிச் சுரங்கத்துக்கு ஆதரவான ஆளும் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு சில வாரங்களுக்குப் பிறகு கிடைத்துள்ளது.

✓ அப்போட் முனையிலிருந்து 320 கி.மீ., தொலைவில் அமைந்துள்ள கடற்கரைக்கு, இரயில்பாதை உட் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் குயின்ஸ்லாந்துக்கு அப்பாலுள்ள கலிலீ வடிநிலத்தை அகழ்வது ஆகியவற்றின் மூலம் ஆஸ்திரேலியாவில் ½ டசன் புதிய அனல் நிலக்கரிச் சுரங்கங்களை அமைக்க இந்த ஒப்புதல் வழிவகுத்துள்ளது.

✓ முன்னதாக, கௌதம் அதானி தலைமையிலான அதானி குழுமம், சுரங்கத்திட்டம் அமைந்துள்ள இடத்தில், தனது சூழல் திட்டத்தின் ஒருபகுதியாக அருகிவரும் கருந்தொண்டைக் குருவி (Black – Throated Finch) பறவையினங்களைப் பாதுகாப்பதற்காக, குயின்ஸ்லாந்து மாகாண அரசிடமிருந்து தனது முதல் ஒப்புதலைப்பெற்றது. ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கமாக மாறவுள்ள இதிலிருந்து ஆண்டுதோறும் 60 மில்லியன் டன் நிலக்கரியும், மொத்த சுரங்க வாழ்நாளில் 2.3 பில்லியன் டன் நிலக்கரியும் அகழ்ந்தெடுத்துக்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

6. பின்வரும் எந்த நகரத்தில், 10$_{\text{ஆவது}}$ பிராந்திய GRIHA உச்சிமாநாடு நடைபெற்றது?




A) பெங்களூரு

B) புனே

C) நாக்பூர் ☑

D) புது தில்லி

✓ ஜூன்.15 அன்று, மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில், “Transformation strategies for built environment” என்ற கருப்பொருளுடன் 10$_{\text{ஆவது}}$ பிராந்திய GRIHA உச்சிமாநாடு நடைபெற்றது. இந்த ஒருநாள் உச்சிமாநாடு, பசுமை கட்டடத் துறையின் (Green Building Industry) பல்வேறு களங்களிடையே அறிவுப் பகிர்வுக்கான ஒரு தளமாக விளங்கியதுடன் அரசு, கல்வி, சமூக அமைப்புகள், கட்டடக்கலை, பொறியியல் மற்றும்

கட்டுமான மேலாண்மைத்துறை சார்ந்த தனிநபர்களிடையே ஒரு வலையமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்பை எளிதாக்கியது.

- ✓ தன்னாட்சிமிக்க, இலாப நோக்கற்ற சங்கமான GRIHAவை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும், எரிசக்தி மற்றும் வள நிறுவனமும் கூட்டாக இணைந்து அமைத்தன.

**7.** அதிக எடைகொண்ட நீர்மூழ்கிக்குண்டுகளை இந்திய கடற்படைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனம் எது?

A) பாரத் மின்னணு நிறுவனம்

B) பாரத் டைனமிக்ஸ் நிறுவனம் ☑

C) ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம்

D) கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள் நிறுவனம்



- ✓ ஹைதராபாத்தைச் சேர்ந்த பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் நிறுவனம், அதிக எடைகொண்ட நீர்மூழ்கிக்குண்டுகள் (Torpedoes) – வருணாஸ்திரத்தை இந்திய கடற்படைக்கு தயாரித்து வழங்குவதற்கான ரூ.1187.82 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அடுத்த 42 மாதங்களுக்குள் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படும். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்தின் விசாகப்பட்டினப் பிரிவில் இந்த ஆயுதம் தயாரிக்கப்படும்.

- ✓ கப்பலிலிருந்தோ அல்லது நீருக்கடியிலிருந்தோ ஏவப்பட்டு, நீருக்கடியில் தானாக உந்திச்சென்று இலக்கைத் தாக்கக்கூடிய கணையே, அதிக எடையுடைய நீர்மூழ்கிக்குண்டு (அல்லது வருணாஸ்திரம்) எனப்படுகிறது. இந்த ஆயுத அமைப்பு, இலக்கைக் கண்டறிவதில் தனது சொந்த நுண்ணறிவை பயன்படுத்துகிறது. பாரத் டைனமிக்ஸ் நிறுவனம் என்பது இந்தியாவின் படைக்கலங்களையும், ஏவுகணைகளையும் தயாரிக்கும் முன்னணி நிறுவனமாகும்.

**8.** நடப்பாண்டு புச்சியோன் சர்வதேச அருந்திரைப்பட விழாவில் (Bucheon International Fantastic Film Festival – BiFAN) திரையிட தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய திரைப்படங்கள் எது / எவை?

A) மணிகர்ணிகா

B) கலீ பாய்

C) அந்தாதூன்

D) மேற்கண்ட அனைத்தும் ☑




- ✓ பெருமைமிகு 23ஆவது புச்சியோன் சர்வதேச அருந்திரைப்பட விழாவில் (BiFAN – 2019) நான்கு இந்திய திரைப்படங்கள் திரையிட தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள், விஜய் சேதுபதி மற்றும் சமந்தா நடித்த 'சூப்பர் டீலக்ஸ்' என்ற தமிழ்த்திரைப்படமும், கலீ பாய், அந்தாதூன் மற்றும் மணிகர்ணிகா: ஜான்சி இராணி முதலிய ஹிந்தித் திரைப்படங்களும் அடங்கும்.

- ✓ இந்தத் திருவிழா, ஜூன்.27 முதல் ஜூலை.7 வரை தென் கொரியாவில் நடைபெறும். இந்தத் திரைப்பட விழா, உலகின் மிகச்சிறந்த திரைப்படங்களைத் திரையிடுவதற்காக பெயர்பெற்றது.

**9.** நடப்பாண்டின் உலக முதலீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?

A) சர்வதேச நாணய நிதியம்

B) ஆசிய வளர்ச்சி வங்கி

C) உலக வங்கி

D) வர்த்தகம் மற்றும் வளர்ச்சி குறித்த ஐ.நா கருத்தரங்கம் (UNCTAD) ☑

UNITED NATIONS
UNCTAD

- ✓ UNCTADஇன் நடப்பாண்டு உலக முதலீட்டு அறிக்கையின்படி உற்பத்தி, தகவல் தொடர்பு, நிதியியல் சேவைகள் துறைகளில் அதிகமான முதலீடுகளுடன் 2018ஆம் ஆண்டில், இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு 6% அதிகரித்து $42 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில், அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவோரில் இந்தியா 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது. 70-80% முதலீடுகளை இந்தியா ஈர்த்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

- ✓ மேலும், 2018ஆம் ஆண்டில் இந்தியாவுக்கான எல்லை தாண்டிய இணைப்பு & கையகப்படுத்துதலின் (Cross-Border Merger & Acquisitions) வளர்ச்சி $33 பில்லியன் டாலர்களாக இருந்தது. சில்லறை வர்த்தகத்தில் $16 பில்லியன் டாலர் மதிப்பிலான பரிவர்த்தனைகளே இதற்கான முதன்மைக் காரணமாக இருந்தது. இதில், மின்னணு வணிகம் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவை அடங்கும்.

**10.** உலகின் மிகவுயர்ந்த செயல்படும் வானிலை நிலையங்களானது (Operating Weather Stations), பின்வரும் எந்த மலைச் சிகரத்தில் நிறுவப்பட்டுள்ளது?

A) கஞ்சஞ்சங்கா

B) எவரெஸ்ட் ☑

C) மக்காலு

D) $K_2$



- ✓ மலையின் நிலவரங்கள் குறித்த நிகழ்நேர தகவல்களை ஆராய்ச்சியாளர்கள், மலையேறுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக எவரெஸ்ட் சிகரத்தில் உலகின் மிகவுயர்ந்த செயல்படும் வானிலை நிலையங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளதாக தேசிய புவிசார் சங்கம் (National Geographic Society) அறிவித்துள்ளது.

- ✓ இந்தப் பல் – ஒழுங்கு குழுவானது உலகின் மிகவுயர்ந்த இரண்டு செயல்படும் தானியங்கி வானிலை நிலையங்களை உப்பரிகை பகுதியிலும் (8,430 மீ.,), தென் கணவாயிலும் (7,945 மீ.,) நிறுவியுள்ளது. மேலும் 3 வானிலை நிலையங்களும் எவரெஸ்ட் சிகரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- ✓ மற்ற நிலையங்கள் போசே (3,810 மீ.,), எவரெஸ்ட் தள முகாம் (5,315 மீ.,) & முகாம் II (6,464 மீ.,) முதலிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வானிலை நிலையமும் வெப்பநிலை (Temperature), ஒப்பு ஈரப்பதம் (Relative Humidity), பாரமானி அழுத்தம், காற்றின் வேகம் மற்றும் காற்றின் திசை பற்றிய தரவுகளை பதிவுசெய்யும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆவடி நகராட்சியை தமிழ்நாட்டின் 15ஆவது மாநகராட்சியாக அறிவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. புதிய ஆவடி மாநகராட்சியில் பூவிருந்தவல்லி, திருவேற்காடு ஆகிய 2 நகராட்சிகளும், திருநின்றவூர் பேரூராட்சியும் இணைந்துள்ளது. மேலும், நெமிலிச்சேரி, நசரத்பேட்டை, காட்டுப்பாக்கம் உட்பட 11 ஊராட்சிகளும் ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ நுங்கம்பாக்கம் மற்றும் மீனம்பாக்கத்தில் உள்ள இரண்டு வானிலை மையங்களும், உலக வானிலை அமைப்பால் (WMO) நீண்டகாலமாக வானிலை கண்காணிப்பை மேற்கொள்ளும் மையங்கள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ✓ தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட நெகிழிப்பொருட்களை பயன்படுத்தினால் அபராதம் விதிக்கும் நடைமுறை ஜூன்.17 முதல் அமலுக்கு வந்தது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நடப்பாண்டு பசிபிக் சர்வதேச பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பை வென்றவர் யார்?



A) பங்கஜ் அத்வானி

B) செமி சேஜினர்

C) சௌரவ் கோத்தாரி

D) பீட்டர் கில்கிறிஸ்ட் ☑

✓ யர்ரவில் கிளப்பில் நடைபெற்ற நடப்பாண்டு பசிபிக் சர்வதேச பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில், சிங்கப்பூரைச் சேர்ந்த பீட்டர் கில்கிறிஸ்ட், இந்தியாவின் சௌரவ் கோத்தாரியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

**2.** நடப்பாண்டின் பாலைவனமயமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினத்தின் (World Day to Combat Desertification and Drought) கருப்பொருள் என்ன?




A) Combating land degradation for sustainable agriculture

B) The Beauty of Deserts – The Challenge of Desertification

C) Let's Grow the Future Together ☑

D) Social Dimensions of Desertification: Migration & Poverty

✓ பாலைவனமயமாதலை தடுப்பதற்காக பன்னாட்டளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூன்.17 அன்று பாலைவன -மயமாதல் & வறட்சிக்கு எதிரான உலகதினம் கடைபிடிக்கப்படுகிறது. வலுவான சமுதாய ஈடுபாடு & ஒத்துழைப்பு மூலம் நிலச்சீரழிவை தடுக்கமுடியும் என்பதை அனைவருக்கும் நினைவூட்டுவதற்கான ஒரு தனிப்பட்ட தருணமாக இந்நாள் அமைந்துள்ளது. நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப் பொருள், "Let's Grow the Future Together" என்பதாகும்.

**3.** "பெமினா மிஸ் இந்தியா 2019" என முடிசூட்டப்பட்டுள்ள சுமன் ராவ், எந்த மாநிலத்தவராவார்?



A) மகாராஷ்டிரா


B) இராஜஸ்தான் ☑

C) குஜராத்

D) உத்தரப்பிரதேசம்

- ✓ மும்பையில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் உள்ளரங்கில் நடந்த விழாவில், ராஜஸ்தானைச் சேர்ந்த சுமன் ராவ், “பெமினா மிஸ் இந்தியா 2019” என முடிசூட்டப்பட்டார். மேலும், சத்தீஸ்கரைச் சேர்ந்த ஷிவானி ஜாதவ், “பெமினா மிஸ் கிராண்ட் இந்தியா 2019” பட்டத்தையும், பீகாரைச் சேர்ந்த ஷ்ரேயா ஷங்கர், “மிஸ் இந்தியா யுனைடெட் கான்டினென்ட்ஸ் 2019” பட்டத்தையும் வென்றனர். இதன் மூலம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள உலக அழகி 2019 போட்டியில் சுமன் ராவ் பங்கேற்கவுள்ளார்.
- ✓ இந்த நிகழ்ச்சியை ஹிந்தி திரைப்பட தயாரிப்பாளர் கரண் ஜோஹர் மற்றும் நடிகர் – தொகுப்பாளர் மணீஷ் பால் ஆகியோருடன் இணைந்து “மிஸ் வேர்ல்ட் 2017” மனுஷி சில்லர் தொகுத்து வழங்கினார்.

**4.** ஹிருதய்மித்ரா அறக்கட்டளையின் ‘Save Water Hero’ விருதை வென்ற சமூக ஆர்வலர் யார்?



A) ஷாஹீன் மிஸ்திரி

B) சந்தீப் பாண்டே

C) மகரந்த் தில்லூ (Makarand Tilloo) ☑

D) சனல் எடமருகு

- ✓ ஹிருதய்மித்ரா அறக்கட்டளையின் ‘சேவ் வாட்டர் ஹீரோ’ விருதை சமூக ஆர்வலர் மகரந்த் தில்லூ வென்றுள்ளார். புனே நகரத்தில் தண்ணீர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் அவரது முயற்சிகளுக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. தொழில்முறையில் தில்லூ ஒரு சிரிப்பு யோகா பயிற்சியாளரும், செயலூக்கந்தரும் பேச்சாளருமாவார். கசிந்து கொண்டிருக்கும் தண்ணீர்க் குழாய்களை புதியன ஒன்றைக்கொண்டு மாற்றுவதிலிருந்து தண்ணீரைச் சேமிக்கும் பரப்புரையை அவர் தொடங்கினார்.
- ✓ ஹிருதய்மித்ரா அறக்கட்டளை என்பது நோய்கள் பற்றியும் அந்நோய்களை சரிசெய்யத் தேவையான அறுவைசிகிச்சை பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓர் அமைப்பாகும். இந்நிறுவனம் ஓர் இலவச தொலைபேசி உதவி சேவையையும் செய்து வருகிறது. அதன்மூலம், மக்களுக்கு பண உதவி மற்றும் பிற சேவைகளையும் அந்நிறுவனம் வழங்கி வருகிறது.

**5.** சுலோவாக்கியாவின் முதல் பெண் அதிபராக பதவியேற்றுள்ளவர் யார்?



A) சூசானா கபுடோவா (Zuzana Caputova) ☑

B) அட்ரியானா கரேம்பெயு

C) ஜன கோலேசரோவா

D) சுசீ குரோனெரோவா

- ✓ சுற்றுச்சூழல் ஆர்வலரும் அரசியல் பின்புலமற்றவருமான சூசானா கபுடோவா, சுலோவாக்கியாவின் முதல் பெண் அதிபராக பிராத்திஸ்லாவாவில், ஜூன்.15 அன்று பதவியேற்றார். 45 வயதில் அதிபராக பதவியேற்றுள்ள இவர், சுலோவாக்கியா வரலாற்றின் மிக இளைய அதிபரும் ஆவார்.

- ✓ தனது சொந்த ஊரான பெசினோக்கில், நச்சு நிலநிரப்பல் (Toxic Landfill) அமைவதற்கு எதிராக நடந்த போராட்டத்தில் வெற்றிகண்டதன் மூலம் அவர் முதலில் அறியப்பட்டார். இதற்காக, கபுடோவாவுக்கு 2016ஆம் ஆண்டுக்கான கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு வழங்கப்பட்டது. இவருக்கு முன்பு, ஆன்ரேஜ் கிஸ்கா, சுலோவாக்கியாவின் அதிபராக இருந்தார்.

**6.** ISRO திட்டமான சந்திரயான் – IIஇன் முதல் பெண் திட்ட இயக்குநர் (Project Director) யார்?



**A)** ரீத்து கரிதால்

**B)** ரோகிணி காட்போல்

**C)** முத்தையா வனிதா (Muthayya Vanitha) ☑

**D)** ககன்தீப் காங்

- ✓ நிலவுக்கான இந்தியாவின் 2ஆவது திட்டம் – சந்திரயான் – II, ஜூலை.15ஆம் தேதியன்று, அதிகாலை 2.15 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்படவுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) அண்மையில் அறிவித்தது. இந்தக் குறிப்பிட்ட திட்டம், பத்தாண்டுக்கு முன்னர் ஏவப்பட்ட சந்திரயான் – I திட்டத்தின் அடுத்த நவீன பதிப்பாகும். சந்திரயான் – II, நிலவின் மேற்பரப்பை அளவிடும் மற்றும் தாதுக்கள், பாறை வடிவங்கள் மற்றும் நீர் முதலியவற்றின் தகவல்களைச் சேகரிக்கும்.

- ✓ ISRO வரலாற்றில் முதல்முறையாக திட்ட இயக்குநரும், துணை செயல்பாடு இயக்குநருமாக பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். முத்தையா வனிதா, விண் சுற்றுக்கலன் (Orbiter), தரையிறங்கி (Lander) மற்றும் ஊர்தி (Rover) முதலியவற்றின் திட்ட இயக்குநராக இருப்பார். GSLV – Mk III ஏவுகலத்தின் பொறுப்பாளராக துணை செயல்பாடு இயக்குநராக ரீத்து கரிதால் இருப்பார். உண்மையில் உள்ளபடி, இத்திட்டத்தின் பொறுப்புக் குழுவில் 30% பெண்களே உள்ளனர். முழு சந்திரயான் – II திட்டத்துக்கான செலவு சுமார் ரூ.1,000 கோடியாகும்.

**7.** ஐக்கிய நாடுகள் சூழல் திட்டத்தின் புதிய செயற்குழு இயக்குநராக பொறுப்பேற்றுள்ள இங்கர் ஆண்டர்சன் (Inger Andersen), எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?



**A)** நார்வே

**B)** டென்மார்க் ☑

**C)** பின்லாந்து

**D)** சுவீடன்

- ✓ டானிய பொருளாதார வல்லுநரும், சூழல் ஆர்வலருமான இங்கர் ஆண்டர்சன், அண்மையில், ஐ.நா சூழல் திட்டத்தின் (UNEP) புதிய செயற்குழு இயக்குநராக நான்காண்டு காலத்திற்கு பொறுப்பேற்றார். அவருக்கு முன், நார்வேயின் எரிக் சோல்ஹெய்ம் அப்பதவியில் இருந்தார்.

- ✓ UNEPஇல் நியமிக்கப்படுவதற்கு முன்பு, சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) தலைமை இயக்குநராகவும், உலக வங்கியில் நீடித்த மேம்பாட்டுக்கான துணைத்தலைவராகவும், CGIAR பண

வைப்புக்கழகத்தின் (Fund Council) தலைவராகவும் பணியாற்றி வந்துள்ளார். மத்திய கிழக்கு & வட ஆப்பிரிக்காவுக்கான உலக வங்கியின் துணைத்தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார். மேலும், ஐ.நாவில் 15 ஆண்டுகளுக்கு நீர் மற்றும் சுற்றுச்சூழல் சிக்கல்களில் அவர் பணியாற்றியுள்ளார்.

**8.** தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கு மாணாக்கரை பணியமர்த்தவும் பயிற்சியளிக்கவுமாக 'TechBee' என்னும் திட்டமொன்றை விரைவில் தொடங்கவுள்ள நிறுவனம் எது?

A) விப்ரோ

B) இன்போசிஸ்

C) ஹெச் சி எல் ☑

D) ரிலையன்ஸ்

- ✓ தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கு மாணாக்கரை பணியமர்த்தவும் பயிற்சியளிக்கவுமாக 'TechBee' என்னும் திட்டமொன்றை HCL டெக்னாலஜிஸ் நிறுவனம் விரைவில் தொடங்கவுள்ளது. மாணவர்கள் தங்களின் தொழிற்முறை வாழ்க்கையை முன்கூட்டியே தொடங்குவதற்கும், பணரீதியாக அவர்களை சார்பில்லாதவர்களாக உருவாக்குவதற்குமான ஒரு வாய்ப்பை இந்தத் திட்டம் ஏற்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், பிளஸ் 2 முடித்த மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வு நடத்தி, அவர்களுக்கு ஓராண்டு பயிற்சியும் அதன்பின் பணியும் வழங்கப்படும். 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட மதிப்பெண்களுடன் 2018 அல்லது 2019இல் +2 முடித்த மாணாக்கர் இந்தத் திட்டத்திற்கு தகுதியுடையவர் ஆவார்கள்.

- ✓ இருப்பினும், மாணாக்கர் இந்தத் திட்டத்தில் சேருவதற்கு, ரூ.2 இலட்சத்தைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். கடன் வசதியையும் அந்தக் குறிப்பிட்ட நிறுவனமே செய்தளிக்கும். மேலும், நிறுவனத்தில் பணிக்கு இணைந்த பின்னர், சமப்படுத்தப்பட்ட மாதத்தவணைகளில் (EMI) மாணாக்கர் அக்கடனை திருப்பிச்செலுத்த வேண்டும். HCL நிறுவனத்தில் பணிபுரியும்போது, மேற்படிப்பை தொடர விழையும் மாணாக்கருக்கு BITS பிலானி மற்றும் சாஸ்திரா பல்கலையில் படிக்கவும் வசதி ஏற்படுத்தித்தரப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அவர்களின் வேலை மற்றும் திறமைக்கு ஏற்ப ரூ.2 – 2.5 லட்சம் வரை ஊதியம் வழங்கப்படும்.

**9.** பெனி பாலம் (Feni Bridge), பின்வரும் எந்த மாநிலங்களுள் அமைந்துள்ளது?

A) மேற்கு வங்கம்

B) ஒடிசா

C) திரிபுரா ☑

D) ஆந்திரப்பிரதேசம்




- ✓ மைத்ரீ பாலம் எனவும் அழைக்கப்படும் பெனி பாலம், இந்தியாவின் வடகிழக்கும் வங்கதேசத்துக்கும் இடையே பெனி ஆற்றுக்கு மேல் வர்த்தகம் / வணிகத்திற்கான ஒரு இணைப்புப் பாலமாக வளர்ந்து வருகிறது. மேலும், இது வங்கதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்துடன் திரிபுராவை இணைக்கும். இது

தென் திரிபுராவுக்கும், சிட்டகாங்குக்கும் இடையே நேரடிச்சாலை இணைப்பை வழங்கும். சிட்டகாங் துறைமுகத்தை இந்தியா ஒரு "கலம்தொடு துறைமுகமாக" பயன்படுத்தவும், வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகளை ஊக்குவிக்கவும் இப்பாலம் வாய்ப்பாக அமைகிறது.

✓ இந்தப் பாலம், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து சட்டோகிராம் வழியாக வங்கதேசத்துக்கு கனரக இயந்திரங்கள் மற்றும் பொருட்களை கொண்டு செல்லவும் / வரவும் உதவும். இப்பாலத்தை இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகத்தின் தேசிய நெடுஞ்சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், ரூ.82 கோடி செலவில் கட்டி வருகிறது. இந்தத் திட்டம், வரும் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**10.** மக்களவையின் தற்காலிக அவைத்தலைவராக பதவியேற்றுள்ளவர் யார்?



**A)** பவன் குமார் கோயல்

**B)** கர்த்தார் சிங் பதானா

**C)** வீரேந்திர குமார் ☑

**D)** ரந்தீர் சிங் ருஹால்

✓ மத்தியப்பிரதேசத்தின் திகம்கார் தொகுதியிலிருந்து 7 முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட Dr. வீரேந்திர குமார், மக்களவையின் தற்காலிக அவைத்தலைவராக பொறுப்பேற்றுள்ளார். குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், Dr. குமாருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். தற்காலிக அவைத்தலைவராக, மக்களவையின் முதல் அமர்வுக்கு அவர் தலைமை தாங்குவார் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியேற்பு விழாவையும் அவர் நிர்வகிப்பார்.

✓ புதிதாக அமைக்கப்பட்ட பதினேழாவது மக்களவையின் முதல் அமர்வு, ஜூன் 17 முதல் ஜூலை 26 வரை நடைபெறும். தற்காலிக அவைத்தலைவராக, மக்களவையின் அவைத்தலைவர் தேர்தலையும் குமார் மேற்பார்வையிடுவார்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள சாம்பர்க் கருத்தரங்கு மையத்தில், வரும் ஜூலை 4 – 7 வரை 4 நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில், ஜூலை 5ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் உருவாக்கப்பட்ட "சொற்குவைத் திட்டம்" தொடங்கி வைக்கப்படவுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ஆபரேஷன் சன்ரைஸ் 2 என்பது இந்தியாவுக்கும் இந்தியாவின் எந்த அண்டை நாட்டுக்கும் இடையேயான ஓர் ஒருங்கிணைந்த நடவடிக்கை ஆகும்?

**A)** மியான்மர் ☑



**B)** வங்கதேசம்

**C)** நேபாளம்

**D)** பூடான்

- ✓ வடகிழக்கு மாநிலங்களின் எல்லைப்பகுதிகளில் இயங்கிவரும் சில தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக, இந்திய ராணுவமும், அண்டை நாடான மியான்மரைச்சேர்ந்த ராணுவமும் ஒருங்கிணைந்த நடவடிக்கையை மேற்கொண்டன. அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் எல்லையோரப் பகுதிகளில், கடந்த மே.16 முதல் மூன்று வாரங்கள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- ✓ இந்த நடவடிக்கையின்போது, கம்தாபூர் விடுதலை அமைப்பு, NSCN (கப்லாங்), அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி (I), போரோலாந்து ஜனநாயக முன்னணி உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்களின் முகாம்கள் அழிக்கப்பட்டன. மேலும், இவ்வியக்கங்களைச் சேர்ந்த அறுபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். மியான்மர், இந்தியாவின் அண்டை நாடுகளுள் ஒன்றாகும். 1,640 கி.மீ., எல்லையை பல்வேறு வடகிழக்கு மாநிலங்களுடன் அந்த நாடு பகிர்ந்து கொள்கிறது. இதில், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாகாலாந்து மற்றும் மணிப்பூர் முதலிய மாநிலங்களும் அடங்கும்.

- ✓ இந்த நடவடிக்கையின் முதல் கட்டம் 2019 பிப்ரவரியில் தொடங்கப்பட்டது. இதில் கலடன் பன்முகப் போக்குவரத்துத் திட்டத்தை எதிர்த்த அரக்கன் இராணுவத்தின் (மியான்மரின் ஒரு கிளர்ச்சிக்குழு) உறுப்பினர்களை இந்திய இராணுவம் குறிவைத்தது. தென்கிழக்கு ஆசியாவிற்கான இந்தியாவின் நுழைவாயிலாக கலடன் பன்முகப் போக்குவரத்துத் திட்டம் பார்க்கப்படுகிறது.

**2.** எந்தத் தேதியில், சர்வதேச குடும்பத்திற்கு பணமனுப்புதல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது?

**A)** ஜூன் 17

**B)** ஜூன் 16 ☑

**C)** ஜூன் 18

**D)** ஜூன் 20

International Day
of Family Remittances
16 JUNE

- ✓ தங்களின் 800 மில்லியன் குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக 200 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்கும், அவர்களின் குழந்தைகளுக்கு நம்பிக்கையின் எதிர்காலத்தை உருவாக்குவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.16

அன்று சர்வதேச குடும்பத்திற்கு பணமனுப்புதல் தினம் (International Day of Family Remittances) கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தக் கடைப்பிடிப்பின் மூலம், இப்பங்களிப்புகள் மில்லியன் கணக்கான வீடுகள், சமூகங்கள், நாடுகள் மற்றும் அனைத்துப் பிராந்தியங்களிலும் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த மேலதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஐ.நா அவை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ தனிநபர்கள் மற்றும் / அல்லது கூட்டு நடவடிக்கைகள் மூலம் பணம் அனுப்புவதன் தாக்கத்தை அதிகரிக்கக்கூடிய வழிகளைக் கண்டறிய அரசாங்கங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு சமூகங்கள் ஆகியவற்றுக்கு இந்நாள் அழைப்பு விடுக்கிறது.

**3.** எந்தத் தேதியில், மதியிறுக்க உரிமைகள் தினம் (Autistic Pride Day) கடைப்பிடிக்கப்படுகிறது?

A) ஜூன் 17

B) ஜூன் 16

C) ஜூன் 18 ☑

D) ஜூன் 20

✓ மதியிறுக்கம் உடையோருக்கான பெருமிதத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும், மதியிறுக்கம் என்பது ஒரு நோய் அல்ல, வேறுபாடு என புரிந்துகொள்வதற்காகவுமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.18 அன்று மதியிறுக்க உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. மதியிறுக்கம் (AUTISM) அல்லது மதியிறுக்க இயலாமை என்பது சமூகக் குறைபாடுகள், தகவல்தொடர்பு சிக்கல்கள், கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் ஒரே செயலை மீண்டும் மீண்டும் செய்தல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் சிக்கலான ஒரு நரம்பியல் வளர்ச்சிக் கோளாறாகும்.

✓ பொதுவாக வாழ்வின் முதல் மூன்று ஆண்டுகளில் ஏற்படும் இது, வாழ்நாள் முழுவதும் இருக்கும் ஒரு நிலையாகும். மதியிறுக்கத்திற்கான சரியான காரணம் இந்நாள்வரை கண்டறியப்படவில்லை. எனினும், மரபணு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளுடன் இது தொடர்புடையது என அறியப்படுகிறது. மதியிறுக்க உரிமைகள் தினமானது மதியிறுக்க உரிமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'Aspies For Freedom' என்ற குழுவால் ஏற்படுத்தப்பட்டது.

**4.** உலக உணவு இந்தியா நிகழ்வு, பின்வரும் எந்த நகரத்தில் நடைபெறவுள்ளது?

A) இந்தூர்

B) ஜெய்ப்பூர்

C) புது தில்லி ☑

D) லக்னோ

✓ வளர்ந்துவரும் உணவுத்துறையில் முதலீட்டை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, உலக உணவு இந்தியா (World Food India – 2019) நிகழ்வானது வரும் நவம்பர் 1 – 4 வரை புது தில்லியில் நடைபெறவுள்ளது. உணவு பதப்படுத்தும் துறையை மேம்படுத்துவதையும், உலகின்

உணவு பதப்படுத்தும் தளமாக இந்திய நாட்டை நிலைநிறுத்துவதையும் இந்நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. “Forging Partnerships for Growth” என்பது இந்நிகழ்வுக்கான முழக்கவரியாக இருக்கும்.

✓ இது உலக உணவு இந்தியாவின் 2ஆவது பதிப்பாகும். முந்தைய பதிப்பு 2017இல் நடந்தது. அதில், 61 நாடுகள் பங்கேற்றன. அச்சமயம், $14 பில்லியன் டாலர் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

**5.** எந்த மாநிலத்தில், ‘ஸ்நான யாத்திரை’ என்ற நீராடல் திருவிழா கொண்டாடப்பட்டுள்ளது?

A) ஒடிசா ☑

B) ஜார்க்கண்ட்

C) பீகார்

D) மேற்கு வங்கம்



✓ ‘ஸ்நான யாத்திரை’ என்பது ஹிந்து மாதமான ‘ஜேஷ்தா’வில் வரும் முழு நிலவு நாளன்று (பூர்ணிமா) கொண்டாடப்படும் ஒரு நீராடல் திருவிழாவாகும். மேலும், இது பகவான் ஜகந்நாதரின் பிறந்தநாள் எனவும் கருதப்படுகிறது. இது, ஆண்டுதோறும் ‘ரத யாத்திரை’ திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் ஒரு குறிப்பிடத்தக்க சடங்காகும். பூரியில் ஸ்ரீ ஜகந்நாத கோவிலில் உள்ள தெய்வங்களின் வருடாந்திர சடங்காச்சார நீராடல் சடங்குகள், அண்மையில் ஜூன்.17 அன்று, ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

✓ இந்த விழா, பகவான் ஜகந்நாதர், பாலபத்ரா மற்றும் தேவி சுபத்ராவின் ‘ஸ்நான யாத்திரை’ என்று அழைக்கப்படுகிறது. ‘ஸ்நான மண்டபம்’ என்றழைக்கப்படும் நீராடல் பீடத்தில் இது நடத்தப்படுகிறது. அவ்வமயம், பூசாரிகள் 108 குடம் நறுமணமிக்க புனித நீரை தெய்வங்களின் மீது ஊற்றுவர். தெய்வங்களின் சிலைகள் முதன்முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, மன்னர் இந்திரதியும்னா, இந்த விழாவை முதன்முறையாக ஏற்பாடு செய்ததாக ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6.** சேவைகளிடை உளவுத்துறையின் (Inter – Services Intelligence – ISI) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) அஹ்மத் சுஜா பாஷா

B) ஜாகீருல் இஸ்லாம்

C) அசிம் முனீர்

D) பைஸ் ஹமீத் (Faiz Hameed) ☑



✓ பாக்கிஸ்தானின் திறன்மிகுந்த உளவு நிறுவனமான சேவைகளிடை உளவுத்துறையின் (ISI) புதிய தலைமை இயக்குநராக Lt.Gen பைஸ் ஹமீத் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்பு, Lt.Gen அசிம் முனீர் இந்தப் பதவியில் இருந்தார். பைஸ் ஹமீத், ஏற்கனவே ISI உளவுத்துறையின் புலனாய்வுப் பிரிவு தலைவராக பதவிவகித்து வந்தார்.

- ✓ நாட்டின் புலனாய்வு வலையமைப்பை வலுப்படுத்துவதற்காக ISI, 1948ஆம் ஆண்டில், தன்னாட்சிமிக்க ஒரு பிரிவாக உருவாக்கப்பட்டது. ISI, முன்னர், புலனாய்வு பணியகத்தின் (IB) ஒருபகுதியாக இருந்தது. அப்போது அது இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே உளவுத்துறை பகிர்வு மற்றும் வெளிப்புற உளவுத்துறை தகவல் சேகரிப்பு ஆகிய பணிகளைக் கையாண்டது.

- ✓ தொடக்கத்தில் அதன் தலைமையகம் இராவல்பிண்டியில் அமைந்திருந்தது. ஆனால் பின்னர் அது இசுலாமாபாத்துக்கு மாற்றப்பட்டது. 1950இல், பாகிஸ்தானிய நலன்களையும் தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்யும் பணி அதிகாரப்பூர்வமாக ISIக்கு வழங்கப்பட்டது.

**7.** பின்வரும் எந்த நகரத்தில், UNCCD COP 14ஐ இந்தியா நடத்தவுள்ளது?

A) புது தில்லி ☑

B) சிம்லா

C) சண்டிகர்

D) ஹைதராபாத்

- ✓ முதன்முறையாக, வரும் செப்.2 – 14 ஆகிய தேதிகளுக்கு இடையில், புது தில்லியில், ஐ.நா அவையின் பாலைவனமாக்கலுக்கு எதிரான பேரவையின் (UNCCD) கட்சிகளின் மாநாட்டின் (Conference Of Parties – COP 14) 14ஆவது அமர்வை இந்தியா நடத்தவுள்ளது. ஏறக்குறைய 197 நாடுகளில் இருந்து குறைந்தது 5,000 பிரதிநிதிகள் இதில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ COP – 14க்கு முன்பாக, சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், வனப்பரப்பு மறுசீரமைப்புக்கான இந்தியாவின் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு முதன்மை திட்டத்தை ('Bonn Challenge' என்று அழைக்கப்படும் ஒரு மிகப்பெரிய சர்வதேச முயற்சியின் ஒருபகுதி) தொடங்கினார். ஹரியானா, ம.பி, மகாராஷ்டிரா, நாகாலாந்து & கர்நாடகாவில் 3½ ஆண்டு காலகட்டத்தில் இது செயல்படுத்தப்படும்.

- ✓ இந்தத் திட்டமானது நாட்டிற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் கண்காணிப்பு நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கும் தகவமைப்பதற்கும் மற்றும் ஐந்து முன்னோடி மாநிலங்களுக்குள் திறனை வளர்ப்பதற்கும் நோக்கம் கொண்டிருக்கும்.

- ✓ 'Bonn Challenge' என்பது 2020ஆம் ஆண்டளவில், உலகின் 150 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான காடழிப்பு மற்றும் சீரழிக்கப்பட்ட நிலத்தையும், 2030ஆம் ஆண்டளவில் 350 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான நிலத்தையும் மீட்டெடுப்பதற்கான ஒரு சர்வதேச முயற்சியாகும். UNFCCC, UNCCD மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை பேரவை (CBD) முதலிய 3 முக்கியப்பேரவைகளை ஐக்கிய நாடுகள் அவை கொண்டுள்ளது. 1994இல் நிறுவப்பட்ட UNCCD என்பது சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுச் சிக்கல்களை நிலப்பொருளுடன் இணைக்கும் ஒரே சட்டப்பூர்வ சர்வதேச ஒப்பந்தமாகும்.

**8.** இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய செயற்குழு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



A) ரவி மிஸ்ரா (Rabi Mishra) ☑

B) N S விஸ்வநாதன்

C) பிரீத்தி சின்ஹா

D) உஷா தாஸ்

✓ ரோஸ்மேரி செபாஸ்டியனின் ஓய்வுக்குப் பிறகு பதவி காலியாகிவிட்டதை அடுத்து, ரிசர்வ் வங்கியின் (RBI) புதிய செயற்குழு இயக்குநராக (Executive Director) Dr. ரவி N மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார். செயற்குழு இயக்குநராக, மிஸ்ராவின் பணிகளுள் வங்கியல்லாத மற்றும் கூட்டுறவு வங்கிகளை மேற்பார்வை செய்தல் முதலான பணிகள் அடங்கும். சுமார் 30 ஆண்டுகளாக இவர் ரிசர்வ் வங்கியில் பணியாற்றி வருகிறார்.

**9.** 119$_{\text{ஆவது}}$ US ஓபன் கோல்ப் சாம்பியன்ஷிப்பை வென்றவர் யார்?




A) புரூக்ஸ் கோய்கா

B) டைகர் வுட்ஸ்

C) கேரி வுட்லேண்ட் (Gary Woodland) ☑

D) கிரேம் மெக்டவல்

✓ கலிபோர்னியாவில் உள்ள பெப்பிள் பீச் கோல்ப் லிங்க்ஸில் நடந்த நடப்பாண்டின் US ஓபன் கோல்ப் சாம்பியன்ஷிப்பில், அமெரிக்காவின் கேரி வுட்லேண்ட், 3 அடிகளில் சாம்பியன்ஷிப்பை வென்றார். இது அவரது முதல் முக்கிய சாம்பியன்ஷிப் வெற்றியும், ஆறாவது தொழில்முறை வெற்றியும் ஆகும்.

**10.** அண்மையில் காலமான மொகமத் மோர்சி, எந்த நாட்டின் முன்னாள் அதிபராக இருந்தார்?



A) எகிப்து ☑

B) ஈரான்

C) இஸ்ரேல்

D) துருக்கி

✓ உளவு வேலை செய்தது, வன்முறையைத் தூண்டியது முதலான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், கெய்ரோவில், ஜூன்.17 அன்று நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தியபோது, எகிப்தின் முன்னாள் அதிபர் மொகமத் மோர்சி (67) காலமானார். ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எகிப்தின் முதல் அதிபர் இவர்தான்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** 17ஆவது மக்களவையின் அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A) ராம்சரன் போஹாரா

B) ராகுல் கஸ்வான்

C) ஓம் பிர்லா ☑

D) மனோஜ் ராஜோரியா



- ✓ கோட்டாவைச் சேர்ந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் ஓம் பிர்லா, பதினேழாவது மக்களவையின் புதிய தலைவராக ஒருமனதாகத் தேர்வுசெய்யப்பட்டார். காங்கிரசு, திமுக, TMC, BJD, YSR காங்கிரசு, JD (U) மற்றும் சிவசேனா உள்ளிட்ட அனைத்து முக்கிய அரசியல் கட்சிகளும், பிரதமரும் நாடாளுமன்றத் தலைவருமான மோடியின் ஓம் பிர்லாவை அவைத்தலைவராகத் தேர்வு செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்தன. அதன்பின்னர், தற்காலிக அவைத்தலைவர் Dr. வீரேந்திர குமார், ஓம் பிர்லாவை அவைத்தலைவராக அறிவித்தார்.

- ✓ இதைத் தொடர்ந்து, ஓம் பிர்லாவை பிரதமர் மோடி உள்ளிட்ட பிற தலைவர்கள் அழைத்துச்சென்று மக்களவைத் தலைவர் இருக்கையில் அமரச்செய்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். ஒரு விவசாயியும், சமூக சேவையாளருமான பிர்லா, மாணவர் தலைவராக தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். பின்னர், 2003, 2008 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இராஜஸ்தான் சட்டமன்றத்திற்கு தொடர்ந்து மும்முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2014இல் அவர் தனது முதல் மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றார். மீண்டும் 2019இல் இராஜஸ்தானின் கோட்டா மக்களவைத் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**2.** வங்கதேசத்தின் முதல் இரும்புத்தாது சுரங்கமானது பின்வரும் எந்த மாவட்டத்தில், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?

A) பப்னா

B) தினாஜ்பூர் (Dinajpur) ☑

C) டாக்கா

D) சிராஜ்கஞ்ச்



- ✓ வங்கதேசத்தில் முதன்முறையாக, தினாஜ்பூரில் உள்ள இசப்பூர் கிராமத்தில் இரும்புத் தாது சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 6 – 10 ச.கி.மீ., பரப்பளவில், 400 அடி தடிமன்கொண்ட இரும்பு அடுக்கானது 1,750 அடி பரப்புக்கு காணப்படுவதாக வங்கதேச புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. இந்தச் சுரங்கத்தில் உள்ள இரும்பின் சதவீதம் 65 ஆக உள்ளது. அது தாதுவின் உயர்தரத்தைக் குறிக்கிறது. கனடா, சீனா, பிரேசில், சுவீடன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற பிற நாடுகளில் இந்தச் சதவீதம் ஐம்பதுக்கும் குறைவாகவே உள்ளது.

✓ சுரங்கத்தின் பல்வேறு மட்டங்களில் தங்கம், செம்பு, நிக்கல் & குரோமியம் போன்ற பிற கனிமங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இரும்புச் சுரங்கத்தின் கண்டுபிடிப்பானது வங்கதேசத்தின் பொருளாதாரக் கதவுகளைத் திறந்துள்ளது. காந்தத்தாதுவில் இரும்பின் செறிவு 65 சதவீதமாக இருப்பதால், இந்தச் சுரங்கமானது பொருளாதார ரீதியாக சாத்தியப்படும்.

**3.** QS உலகப் பல்கலைத் தரவரிசை 2020இல் இந்தியாவின் சிறந்த நிறுவனமாக அமைந்துள்ள நிறுவனம் எது?

A) ஐஐடி பம்பாய் ☑

B) ஐஐடி தில்லி

C) ஐஐஎஸ்சி பெங்களூரு

D) ஐஐடி இந்தூர்

✓ சமீபத்திய QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2020இல், சிறந்த சர்வதேச பல்கலைக்கழகங்களுள் 23 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. அதில், உலகளவில் 152ஆவது இடத்தைப் பிடித்து பம்பாய் ஐஐடி நிறுவனம் இந்தியாவின் சிறந்த நிறுவனமாக மாறியுள்ளது. தில்லி ஐஐடி மற்றும் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (ஐஐஎஸ்சி) ஆகியவை முதல் 200 இடங்களுள் இடம்பெற்றுள்ளன. ஐஐடி மெட்ராஸ் (271), ஐஐடி கரக்பூர் (281), ஐஐடி கான்பூர் (291), ஐஐடி ரூர்க்கி (383), தில்லி பல்கலை (474) மற்றும் ஐஐடி கௌஹாத்தி (491) முதலியவை 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

✓ உலகத்தரம்வாய்ந்த MIT (Massachusetts Institute of Technology) தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாக QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடம் பிடித்து வரலாற்று சாதனையைப் புரிந்துள்ளது. QSஇன் கூற்றுப்படி, வேறு எந்தப் பல்கலைக்கழகமும், இவ்வளவு நீண்டகாலத்திற்கு முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டதில்லை. ஸ்டான்போர்ட் பல்கலை, ஹார்வர்ட் பல்கலை மற்றும் கலிபோர்னியா தொழில்நுட்பக் கழகம் (CalTech) – இவையனைத்தும் முறையே உலகின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளன.

**4.** 12ஆவது ReCAAP ISC திறன் மேம்படுத்தல் பயிற்சியரங்கை இணைந்து நடத்திய இந்தியாவின் ஆயுதப்படை எது?

A) இந்தியக் கடற்படை

B) இந்திய இராணுவம்

C) இந்தியக் கடலோரக் காவல்படை ☑

D) இந்திய விமானப்படை

✓ இந்தியக் கடலோரக் காவல்படையானது ஜூன் 19 – 20 ஆகிய தேதிகளில், கடற்கொள்ளை மற்றும் ஆயுதக்கொள்ளை தொடர்பான பிரச்சனைகள் குறித்த அறிவை வளர்த்துக்கொள்வதற்காக புது தில்லியில், 12ஆவது சர்வதேசத் திறன் மேம்பாட்டு பயிற்சியரங்கை இணைந்து நடத்தியது.

- ✓ ஆசியாவில் உள்ள கப்பல்களில் நடத்தப்படும் கடற்கொள்ளை மற்றும் ஆயுதக்கொள்ளைகளுக்கு எதிரான பிராந்திய கூட்டுறவு ஒப்பந்தத்தின் (Regional Cooperation Agreement on Combating Piracy and Armed Robbery against Ships in Asia – ReCAAP) ஒத்துழைப்புடன் இந்த 2 நாள் பயிற்சியரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ReCAAP ஆனது ஆசியக் கடல்களில் கடற்கொள்ளை & ஆயுதக்கொள்ளைகளை கையாள்வதற்கான முதல் பிராந்திய அரசாங்கத்திற்கு இடையேயான ஒப்பந்தமாகும். தற்போது, 20 நாடுகள் ReCAAPஇல் உறுப்பினர்களாக உள்ளன. இப்பயிற்சியரங்கில், 19 நாடுகளைச்சேர்ந்த மொத்தம் 31 சர்வதேசப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**5.** MSMEகளுக்கான முதலமைச்சரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

A) பஞ்சாப்

B) மகாராஷ்டிரா ☑


C) இராஜஸ்தான்

D) மத்தியப்பிரதேசம்

- ✓ அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME) முதலமைச்சரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை தொடங்க மகாராஷ்டிர மாநில அரசு முடிவு செய்துள்ளது. தொழிற்துறையின் இந்த முன்னணி திட்டத்தில் பெண் தொழில்முனைவோருக்கு 30% இடஒதுக்கீடு வழங்கப்படும். பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் வரிசையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். தொழில்முனைவோரை ஊக்குவிப்பதும், வேலையின்மை பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- ✓ இந்தத் திட்டத்திற்கான மைய வங்கியாக கார்ப்பரேஷன் வங்கி இருக்கும். மேலும், பயனாளிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார்துறை வங்கிகளான YES வங்கி, ஐசிஐசிஐ வங்கி மற்றும் HDFC முதலிய வங்கிகள் நிதியுதவி அளிக்கும். இந்தத் திட்டத்திற்கென கூடுதலாக, 50 புதிய தொழிற்துறை பூங்காக்கள் வட்டார அளவில் அரசாங்கத்தால் உருவாக்கித் தரப்படும்.

**6.** எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள், தடகள வீரர் / வீராங்கனைகளுக்கான புதிய வகை குளிரூட்டும் உடையை உருவாக்கியுள்ளனர்?




A) ஜப்பான் ☑

B) இந்தோனேசியா

C) சீனா

D) இந்தியா

- ✓ ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், தடகள வீரர்கள் அல்லது வீராங்கனைகளுக்காக ஒரு புதிய வகை குளிரூட்டும் உடையை உருவாக்கியுள்ளனர். அவ்வுடை, புழுக்கம் நிறைந்த கோடைகாலங்களில் பாதுகாப்பாக விளையாட உதவும். இக்குளிரூட்டும் உடை,

பனிப்பொதிகளால் நிரப்பப்பட்டுள்ளது. மேலும், கழுத்தைக் குளிர்விக்கக்கூடிய கழுத்துப் பட்டையை இது கொண்டுள்ளது. வீரர் அல்லது வீராங்கனைகளின் மேல் – உடல் தோலை குளிர்விப்பதே இதன் நோக்கமாகும். அது அவர்களின் இதயத்துடிப்பு & கழுத்து & தோலின் வெப்பநிலையை குறைக்கும்.

✓ 2020ஆம் ஆண்டின் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள், வெப்பமான மற்றும் புழுக்கமான ஜப்பானிய கோடையில் நடைபெறவுள்ளன. அப்போது, அங்கிருக்கும் சுற்றுப்புற வெப்பநிலை 33° செல்சியசுக்கு மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வீரர் அல்லது வீராங்கனைகள் இதை எதிர்த்துப் போராட உதவியாக, ஆராய்ச்சியாளர்கள், ஜப்பானிய விளையாட்டு ஆடைதயாரிப்பு நிறுவனமான Mizuno உடன் இணைந்து இந்தப் புதிய வகை குளிரூட்டும் ஆடையை பரிசோதித்துள்ளனர்.

**7.** புகையில்லா சமையலறைகளுக்காக "சுல்லா – Chullah" என்ற திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?



A) உத்தரப்பிரதேசம்

B) கர்நாடகா

C) மேற்கு வங்கம்

D) மகாராஷ்டிரா ☑

✓ பெண்களுக்கு சமையலறையில் புகையில்லாத சூழலை உருவாக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை தொடங்க மகாராஷ்டிர மாநில அரசு முடிவு செய்துள்ளது. "சுல்லா (விறகடுப்பு) – இலவச மற்றும் புகை இல்லாத மகாராஷ்டிரா" என்று பெயரிடப்பட்டுள்ள இத்திட்டம், உஜ்வாலா அல்லது பிற LPG விநியோக திட்டத்தின் கீழ் பயனடையாத பெண்களை குறிவைத்து தொடங்கப்படவுள்ளது. இந்த முன்னோடித் திட்டமானது நக்சல் பாதிப்புக்குள்ளான பகுதிகளிலும், விவசாயிகள் தற்கொலை வீதம் அதிகமாக உள்ள மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

**8.** நடப்பாண்டின் Randstad Employer Brand ஆராய்ச்சி அறிக்கையின்படி, பின்வருவனவற்றுள் இந்தியாவின் மிகவும் மனங்கவர்ந்த நிறுவன பிராண்ட் (Employer Brand) எது?

amazon.in

A) நெஸ்லே

B) சோனி இந்தியா

C) மைக்ரோசாப்ட் இந்தியா

D) அமசோன் இந்தியா ☑

✓ 2019 Randstad Employer Brand ஆராய்ச்சி அறிக்கையின்படி, மின்னணு வணிக நிறுவனமான அமேசான் இந்தியா, இந்தியாவின் மிகவும் மனங்கவர்ந்த நிறுவன பிராண்டாக உள்ளது. அதைத் தொடர்ந்து மைக்ரோசாப்ட் இந்தியா மற்றும் சோனி இந்தியா முதலிய நிறுவனங்கள் உள்ளன. பத்து நிறுவனங்கள் அடங்கிய அந்தப் பட்டியலில், மெர்சிடஸ் – பென்ஸ் (4), ஐபிஎம் (5), லார்சன் & டூப்ரோ (6), நெஸ்லே (7), இன்போசிஸ் (8), சாம்சங் (9), டெல் (10) ஆகிய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

- ✓ நிதி நிலைமை, நவீன தொழில்நுட்பப் பயன்பாடுகள் மற்றும் வலுவான நற்பெயர் ஆகியவற்றின் அடிப்படையில் அமேசான் இந்தியா அதிக புள்ளிகளைப்பெற்று பட்டியலில் முதலிடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளது. மேலும், பெரும்பாலான இந்தியர்கள் (55 சதவீதம்) மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றவே விரும்புவதாகவும், அதே நேரத்தில், 9% இந்தியர்கள் மட்டுமே துளிர் நிறுவனங்களில் பணியாற்ற விரும்புவதாகவும் இந்த ஆராய்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✓ வேலை பாதுகாப்பு, நிதியியல் நிலைமைகள், சுகாதாரம், மற்றும் தொழில் முன்னேற்ற வாய்ப்புகள் முதலியன பன்னாட்டு நிறுவனங்களை தெரிவு செய்யும் காரணங்களாக கூறப்படுகின்றன. IT, ITeS மற்றும் தொலைத்தொடர்பு துறை (67%), சில்லறை விற்பனை, FMCG மற்றும் மின்னணு வணிகத் துறை (67%) தானியங்கி துறை (66%), வங்கியியல் மற்றும் நிதியியல் துறை (65%) போன்ற துறைகளில் செயல்படும் நிறுவனங்களில் பணியாற்ற இந்திய தொழிலாளர்கள் விரும்புவதாக இந்த ஆராய்ச்சி கூறுகிறது.

**9.** MSMEகளுக்கான தற்போதைய கட்டமைப்பை ஆய்வுசெய்யும் ரிசர்வ் வங்கிக் குழுவின் தலைவர் யார்?



**A)** ஷரத் சர்மா

**B)** அனுப் பக்சி

**C)** UK சின்ஹா ☑

**D)** பிந்து அனந்த்

- ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பொருளாதாரம் மற்றும் நிதி நிலைத்தன்மைக்கு நீடித்த தீர்வுகளை பரிந்துரைக்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தொடர்பான எட்டுப்பேர் கொண்ட வல்லுநர் குழுவை அமைத்துள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தற்போதைய கட்டமைப்பை மீளாய்வு செய்ய முன்னாள் SEBI தலைவர் UK சின்ஹா தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. MSME துறைக்கு சரியான சமயத்தில், போதுமான நிதி கிடைப்பதை பாதிக்கும் காரணிகளை இந்தக் குழு ஆராயும்.

- ✓ தற்போதுள்ள MSME கொள்கைகளையும் அவற்றின் தாக்கத்தையும் இந்தக் குழு மதிப்பாய்வு செய்யும். மேலும், உலகளவில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளை பரிந்துரைப்பது மற்றும் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இக்குழு முன்மொழியும்.

**10.** எந்தத் தேதியில், உலக நீடித்த அறுசுவை உணவியல் தினம் கடைபிடிக்கப்படுகிறது?



**A)** ஜூன் 16

**B)** ஜூன் 19

**C)** ஜூன் 18 ☑

**D)** ஜூன் 17

- ✓ நீடித்த அறுசுவை உணவியல் (Gastronomy) ஆற்றக்கூடிய பாத்திரத்தை நோக்கி உலகின் கவனத்தை குவிப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.18 அன்று உலக நீடித்த அறுசுவை உணவியல் தினம் (World Sustainable Gastronomy Day) அனுசரிக்கப்படுகிறது. அனைத்து கலாச்சாரங்களும், நாகரிகங்களும் நீடித்த வளர்ச்சியின் பங்களிப்பாளர்களாக உள்ளன என்பதை இந்நாள் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ அஞ்சல்துறை வழங்கும் பல்வேறு சேவைகளில் சிறந்து விளங்கிய மாவட்ட அஞ்சலகங்களுக்கு 60 விருதுகள் வழங்கப்பட்டன. இதில் அனைத்து சேவைகளிலும் சிறந்து விளங்கியதற்காக ஒட்டுமொத்த சேவை விருது புதுச்சேரி, திருச்சி மற்றும் தென் சென்னை பிரிவு அஞ்சலகங்களுக்கு வழங்கப்பட்டது.
- ✓ இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் காலணிகளில் 60 சதவீதம், தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுவதாக சென்னை கிண்டியில் உள்ள மத்திய காலணி பயிற்சி நிலையத்தின் இயக்குநர் K முரளி தெரிவித்துள்ளார்.
- ✓ தமிழ்நாட்டில் முதன்முறையாக தஞ்சாவூர் ராஜா மிராசுதார் அரசாங்க மருத்துவமனையில் எட்டு திருநங்கைகள் காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ வரும் ஜூன்.28ஆம் தேதி காலை 10 மணிக்கு தமிழ்நாடு சட்டசபை கூட்டத் தொடங்கவுள்ளது.